செ.வெ.எண்.37 நாள்: 24 .01.2018.

**பத்திரிக்கை செய்தி**

இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்ட நாளான ஜனவரி 25 ம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக நாடு முழுவதும் கடந்த 25.01.2011 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டு 8 வது தேசிய வாக்காளர் தினம், 25.01.2018 வியாழக்கிழமை அன்று கரூர் மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. அன்றைய தினம் கரூர் மாவட்டத்தில் உள்ள 598 வாக்குச்சாவடி அமைவிடங்களிலும், மாவட்ட அளவில், கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலும் தேசிய வாக்காளர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், 2018– ன் போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்த மற்றும் திருத்தம் செய்த வாக்காளர்கள் தங்களுக்குரிய வாக்காளர் வண்ண புகைப்பட அடையாள அட்டைகளை வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் செயல்பட்டுவரும் பொது– சேவை மையங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும், 01.01.2018 அன்று 18 வயது பூர்த்தியடைந்த, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாத, தகுதியான நபர்கள் படிவம்– 6 லும், இறந்துபோன / நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளரின் பெயரை நீக்கம் செய்திட படிவம்– 7 லும், வாக்காளர் பட்டியலில் பெயர் / பாலினம் / வயது / உறவு முறை / புகைப்பட மாற்றம் செய்திட படிவம்– 8 லும், ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு முகவரி மாறுதல் செய்திட படிவம்– 8A லும், சம்மந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் அல்லது உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் அனைத்து வேலை நாட்களிலும், அலுவலக வேலை நேரங்களில் மனுக்கள் அளித்திடலாம். மேலும், www.nvsp.in என்ற இணையதளம் மூலமாக நேரடியாகவும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பொது சேவை மையங்களிலும் மனுக்களை பதிவு செய்யலாம் எனவும் கரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலம், கரூர்.**